*Available online at:* [http://www.advancedscientificjournal.com](http://www.advancedscientificjournal.com)
[http://www.krishmapublication.com](http://www.krishmapublication.com)
*IJMASRI, Vol. 3, issue 1, pp. 499- 503, Oct. -2023*
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

**RESEARCH ARTICLE**

# அருப்புக்கோட்டையில் உள்ள பாண்டியர்கால கல்வெட்டுக்கள் கூறும் பொருளாதார நிலை – ஒரு வரலாற்று ஆய்வு

**விஜயராகவன் ரெ**[1] மற்றும் **ராஜபாண்டி சு**[2]
*உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை, S.B.K. கல்லூரி, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்*

**ஆய்வுச்சாரம்**

*அருப்புக்கோட்டை விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஒரு சிறு நகரமாகும். இங்கு பழமையான சொக்கநாதர் கோவில் காணப்படுகிறது. இக்கோவில் பிற்கால பாண்டியர்களான முதலாம் சடையவர்மன் குலசேகரன் காலத்தில் தொடங்கப்பட்டுமுதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் கட்டி முடிக்கப் பெற்றது. இவ்வூர் கல்வெட்டுகளில் 'வெண்புல நாட்டுச் செங்காட்டிருக்கை இடத்து வழி' என்றழைக்கப்பட்ட இவ்வூர், மதுரோசய வளநாட்டு பிரிவாக இருந்ததையும் அறிய முடிகிறது. மேலும் விக்கிரம பாண்டிய பெருந்தெரு, ஸ்ரீ வல்லபப் பெருந்தெரு, தேசிகாசிரியப்பட்டினம் போன்ற தெருப்பெயர்கள் இவ்வூர்வணிக நகரமாக விளங்கியதை தெரிவிக்கின்றன. ஸ்ரீவல்லபப் பெருந்தெருவில், பல நாடுகளுக்கும் சென்று வணிகம் செய்யும் வளமுடைய திசையாயிரத்து ஐந்நூற்றவர் என்ற வணிகக்குழு இருந்ததையும் கல்வெட்டுவழி அறியமுடிகின்றது. அதாவது இக்கோவிலில் உள்ள 17 கல்வெட்டுகளைக் கொண்டு அருப்புக்கோட்டையின் உண்மையான வரலாற்றை ஆய்வு செய்யமுடிகிறது. இதனை அடிப்படையாக கொண்டு தான் இந்த ஆய்வேடு எழுதப்பட்டிருக்கிறது.*

**முக்கியச் சொற்கள்:** *செங்காட்டிருக்கை, விக்கிரமப்பாண்டிய பெருந்தெரு, வளைஞ்சியர் என்ற வணிகக் குழு, பதினாறு சாண்கோல் (நிலத்தின் அளவு)*

## முன்னுரை

*அருப்புக்கோட்டை என்பது தற்போது விருதுநகர் மாவட்டத்தில் விருதுநகரிலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ள ஒரு சிறு நகரமாகும். 1914ம் ஆண்டில் இந்திய கல்வெட்டுத் துறையினர் ஆண்டறிக்கையிலும்[1] (ARE), தமிழக அரசுத் தொல்லியல் துறையினர் வெளியிட்டுள்ள விருதுநகர் மாவட்ட கல்வெட்டு முதல் தொகுதியிலும்[2] அருப்புக்கோட்டையின் கல்வெட்டுகளை வெளியிட்டுள்ளனர். அதன் அடிப்படையில் அருப்புக்கோட்டையின் பாண்டியர் கால கல்வெட்டுகள் கூறும் பொருளாதார நிலை பற்றிக் கீழ்கண்டவாறு விளக்கப்பட்டுள்ளது.*

## கல்வெட்டுக்களின் காலம்

*அருப்புக்கோட்டை நகரத்தின் கிழக்கு பகுதியில் சொக்கநாதர் கோவிலில் பிற்கால பாண்டியர்களின் கல்வெட்டுகள் காணப்படுகிறது. கல்வெட்டுகளின் வாயிலாக இறைவனின் பெயர் குறள்மணி ஈசுவரர்[3], இறைவி பெயர் அருந்தவஞ்செய்த நாச்சியார்[4] என்பதாகும். கி.பி. 12ம் நூற்றாண்டில் குறல்மணிஸ்வரர் என்று அழைக்கப்பட்டவர் 1914ல் ஸ்ரீ சுந்தரேஸ்வரர் எனவும், 1941 முதல் இன்று வரை ஸ்ரீ சொக்கநாத சுவாமி என்று அழைக்கப்பட்டு வருகிறார் என்று திருக்கோவில்*

வெளியிட்ட தல வரலாறு கூறுகிறது[5]. இக்கோவிலில் உள்ள கல்வெட்டுகள் வணிகர்களின் முக்கியத்துவத்தை விளக்குவதாக கூறியுள்ளனர். இக்கோவிலின் கட்டிடப்பணி முதலாம் சடையவர்மன் குலசேகரன் காலத்தில் தொடங்கப்பட்டு முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் முற்று பெற்றது எனலாம். இக்கோவிலில் 17 கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளது[6].

### வெண்புநாடு என்ற செங்காட்டிருக்கை

சிவன் கோவிலிலுள்ள கல்வெட்டுகளின் படி இவ்வூரானது இடத்துவளி[7] என்றும், இது செங்காட்டிருக்கை [8] என்ற உட்பிரிவைக் கொண்ட வெண்புநாடு[9] என்னும் நாட்டுப் பிரிவுக்குள் அடங்கியிருந்தது என்ற செய்தியானது நமக்கு அறியமுடிகிறது [10]. அதில் சில கல்வெட்டுகளில் மட்டுமே (அதாவது அர்த்த மண்டப வடக்கு மற்றும் தெற்குச் சுவர் மற்றும் கருவறை தெற்குச்சுவரில் உள்ள கல்வெட்டுகள்) இடத்துவளி என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது[11]. இதன் மூலம் அருப்புக்கோட்டை என்பது 13ம் நூற்றாண்டில் செங்காட்டிருக்கை என அழைக்கப்பட்டிருப்பது நமக்கு புலனாகிறது.

பொதுவாக இருப்பிடங்களானது ஊர், நகரம், புரம், பட்டிணம் என்று தான் கல்வெட்டு சொற்களாக அழைக்கப்படும். ஆனால் இவ்விடம் “இருக்கை” என்றழைக்கப்படுகிறது. இருக்கை என்பது பொதுவாக இருப்பிடம் என்று பொருள்படும். ஆனால் இங்கு இந்த ஊர் புதிதாகத் தோன்றியிருந்ததால்இது இருக்கை என்று அழைக்கப்பட்டிருக்கலாம் அல்லது ஒரு சமுதாயத்தினைச் சார்ந்தவர்கள் மட்டுமல்லாமல் பல்வேறு சமுதாய மக்கள் தங்கியிருந்ததனாலும் பொதுவாக இது இருக்கை என்று அழைக்கப்பட்டிருக்கலாம். மேலும் இப்பகுதி செங்காடு என்றழைக்கப்பட்டிருக்கிறது. இந்த செங்காடு என்ற கல்வெட்டுச் சொல்லானது தற்போது வழக்கத்திலிருக்கும் செவக்காடு என்ற சொல்லின் தாய்ச் சொல்லாக இருக்கக்கூடும். செவக்காடு அல்லது செங்காடு என்பது சிவந்த மண்ணையுடைய நிலப்பகுதியாகும். இப்போதும் அருப்புக்கோட்டை என்பது சிவந்த மண் பரப்பு கொண்ட பகுதியாகத் தான் இருக்கிறது.[13] எனவே சிவந்த மணல் கொண்ட நிலப்பகுதியினைக் கொண்டதால் செங்காட்டிருக்கை என்ற பெயர் உருவானது என்ற கருத்து புலனாகிறது.

### வணிகர்களின் இருப்பிடம்

செங்காட்டிருக்கை என்று அழைக்கப்படும் அருப்புக்கோட்டையானது வணிகர்கள் வசித்து வந்த பகுதியாக இருந்துள்ளது என்பதை அர்த்த மண்டப சுவரில் உள்ள கல்வெட்டு ஆனது சீவல்லன் பெருந்தெருவான தேசியர் விஷயப்பட்டிணம் என்ற ஒன்றினைக் குறிப்பிடுகிறது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாற பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சோணாடு வ

2. ழங்கியருளிய சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு பத்தாவது மி

3. துனநாயற்று அமரபக்கத்து திரையோசதியும் திங்கட்கிழமையும் பெ

4. ற்ற உரோகினி நாள் வெண்பு நாட்டு செங்காட்டு இருக்கை இடத்து வெளி உ

5. டையார் குறள் மணீசுவரமுடைய நாயனார் கோயில் பதிபாத மூலப் பட்டுடை

6. ப பஞ்சாச்சாரியரோம் இவ்வூர் **சீவல்லவன் பெருந்தெருவான தேசியாசிரியப்பட்டணத்**

7.**து** அரைசூர் உடையான் உடையான் காணியான உலகச் சமஞ்சிதனுக்கு நாங்கள் சண்

மேலும் இப்பகுதியின் மற்றொரு தெருவாக இடத்துவளி விக்கிரம பாண்டியன் என்னும் பெருந்தெரு ஒன்றும் இருந்ததாக தமிழக அரசு தொல்லியல் துறையால் வெளியிடப்பட்டுள்ள விருதுநகர் மாவட்ட கல்வெட்டு தொகுதி-1ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ சோணாடு வழங்கியருளி

2. யருளிய சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு அ

3. வது இடத்துவளி **விக்கிரம பாண்டியந்**

4. **பெருந்தெருவில்** தென்னிலங்கை வளஞ்சி

**5.** யரில் சீகல் சேவகத் தேவனான இலுப்பை

6. யூர் கிழவன் அருந்தவஞ் செய்த நாச்சியாரை எ

7. முந்தருளுவித்தார்

இந்த தெருவில் தென்னிலங்கை சென்று வணிகம் செய்த வளைஞ்சியர்கள் என்ற வணிகக் குழுவினர் வசித்திருந்தனர் என்றும் அவர்களில் ஒருவரான சேகல் சேவகத் தேவன் என்பவர் இவ்வூரில் கோவிலில் உள்ள அருந்தவஞ்செய்த நாச்சியாரை (அம்மன் சிலை) செய்து கொடுத்தார் என்று குறிப்பிடுகிறது.[15] அதுமட்டுமில்லாது வெளிநாட்டு வணிகர்கள் வந்து தங்குமிடமாக மட்டுமின்றி வணிகர் என்று சாதாரணமாக அழைக்கப்படும் உள்நாட்டு வியாபாரிகள் வசிக்கும் பகுதியாக விளங்கியுள்ளது. இவர்கள் **‘வளியிற்பழி விலங்கி** [16] என்று ஓர் பெரிய தெருவினிலே வசித்துள்ளனர்.



©2023 by KRISHMA PUBLICATION 

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமா ........ சக்கரவர்த்திகள் சோணாடு கொண்

2. டருளிய சுந்தர பாண்டிய தே....வது செங்க்காட்டிருக்கை இடத்துவ

3. ளியிற் **பழிவிலங்கிப் பெருந்தெருவில்** ...ஊராய் இடைந்த ஊரோரமும் காரணவரோடு

இவர்கள் செக்கு வைத்து எண்ணை பிழிந்து விற்பனை செய்யும் வணிகர்களாவர். மேலும் இவர்கள் கிராம உள்ளாட்சி நிறுவனமாக உள்ள ஊர் என்ற அமைப்பில் பாதி உரிமையுள்ளவர்களாக திகழ்ந்துள்ளனர் என்று அறிய முடிகிறது.[17] விக்கிரமபாண்டியன்பெருந்தெரு என்ற பெயரில் வணிகச்சந்தை ஒன்று இருந்ததைக் கல்வெட்டு செய்தி வழியாக அறிய முடிகிறது.[18]

**நிலத்தின் அமைப்பு**

கி.பி.13ம் நூற்றாண்டில் இப்பகுதியில் வணிகர்கள் தங்கியிருந்ததால் சமூகத் தன்மைக்கேற்ப விளை நிலங்களை கொண்ட பகுதியாகவே விளங்கியது. கும்பனூர் முத்திரையர் நிலம், மதுவளிக்கன் நிலம், அருவிட்ட சொக்கன் நிலம், தென்னிலங்கை நாடாள்வான் நிலம் என்று தனியார் உடமையாக இருந்தன என்பதற்கு ஆதாரமாக கல்வெட்டு சொற்கள் காணப்படுகின்றன.[19]

கல்வெட்டு:

1. ...... ஒருடமாவாக கும்பனூர் முத்தரையன் ......

2. மு இருமாவரை முந்திரிகையும் துவ....

3. நிலம் அரைமாவின் கி..ந் அரைமாமுக்கா

4. ணியும் அரு... சொக்கன் நிலன முக்காணிய

5. ரைகாணி தென்னிலங்கை நாடா.

ஆனால் நிலத்தின் மீதோ அல்லது விளைந்த பயிர்கள் மீதோ உரிமை கொண்டாடினார்கள் என்பதனை ஆராய்வதற்கு போதுமான சான்றுகள் இல்லை. அதே சமயத்தில் நிலத்தை ஊரார்கள் சேர்ந்து விற்பனை செய்துள்ளனர்.[20] அதாவது கோவிலில் பூசைப்பணி செய்யும் பதிபாத மூலத்துப் பட்டுடை பஞ்சாச்சாரியார் என்பவர் சீவல்லவன் பெருந்தெருவில் உள்ள அரைசூர் உடையான உலக சமைஞ்சிதனுக்கு நிலம் விற்றதை சிவன் கோவிலில் அர்த்த மண்டப சுவர்களில் உள்ள கல்வெட்டில் காணப்படுகிறது.[21] இதன் மூலம் நிலத்தின் மொத்த உரிமை ஊராருக்கு அதாவது ஒரு சமூக பிரிவினருக்கு சொந்தமானதாக இருக்குமோ என்ற சந்தேகத்திற்கு வழிவகுக்கிறது.

கோவிலில் இருக்கும் கல்வெட்டு சான்றுகள் வழியாக இடத்துவளி என்ற ஒரு சமூக பிரிவினர்கள் முக்கியமானவர்களாகவும் அவர்கள் கட்டான் தொழில் செபவர்களாகவும் இருந்தனர் என்று அறிய முடிகிறது.[22]

**நிலத்தின் அளவு**

நிலங்கள் பதினாறு சாண் கோலால் அளக்கப்பட்டு இருக்கிறது.[23] கோவிலுக்கென்று கடமையாக ஒருமா அளவு நிலத்துக்கு நான்கு கலமும், புன்செய் நிலத்திற்கு பதினெறு மேனியும் காந்திரமும் அளக்க நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு:

1. கடமை பதினாறு சாண் கோலால்

2. ருமா களும் மாத்தால் தரு ... நால்

3. .....கலம் இந்த .... ஆழ்வார்

4. ... பயிறுத ...ணபராக துநகொ.....

கல்வெட்டு:

1. பதினாறு சாண்கோலால் ...த்தோம் இவ்வூர் பிடிகைக் காலால் அளக்குத் நெல்லு நாற்கல

2. மும் புன்செய்க்கு இக்கோல் மாத்தால் பதினாறு மேனி காற் திரமமும் இறுப்பாராகவும்

இப்படி கோவிலுக்கு கடமையாக அளக்க வேண்டிய நெல்லை சரியான முறையில் சுத்தம் செய்து அதாவது கல், பதர், சொத்தை, வாசி போன்றவைகள் நித்தம் செய்து கோவிலுக்கு நெல்லை கொடுத்துள்ளனர் என அறிய முடிகிறது.[24]

**கல்வெட்டு**

1. ......நெல்லுக்கற் பதற் செத்தை உள்ளிட்டிவ் வாசி நீக்கி இன்னாய

2. நார் ஸ்ரீபண்டாத்திலே அளந்து .....ந்த நெல்லுக்கு திரம்த்துக்கும் தரவு கொள்வ

3.னாகவும் இப்படி சம்மதித்து சண்டேசுவரப் பெருவிலையாகப் பிரமாணம் பண்ணிக்கு

4. ருத்தோம் இன்னாயனார் கோயில் பதிபாத மூலப்பட்டுடை பஞ்சாச்சாரியரோம் உலகச....

**அருப்புக்கோட்டை கல்வெட்டுகளில் நிலதானம் பற்றியக் குறிப்புகள்**

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சிக்காலத்தில் கி.பி.1249ம் ஆண்டு குறல்மணிஸ்வரர்க்கு அருளாளப்பெருமான் உலக

நாராயணச் சக்கரவர்த்திஎன்பவர் தேவதானமாக நிலக்கொடையை அளித்துள்ளார். இக்கல்வெட்டானது அருப்புக்கோட்டை சிவன் கோவிலில் அர்த்த மண்டப வடக்குச்சுவரில் அமைந்துள்ளது. பூங்காநாடு என்ற நாட்டுப்பிரிவும், பூலோக சுந்தரநல்லூர் என்ற ஊரின் பெயரும் இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன.[25] தென்சுவரில் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சிக்காலத்தில் ஊரவரும், காரணவரும் இணைந்த்து மூன்று விளக்கு எரிக்க எண்ணெய் வழங்க்கியதையும் அதனை ஏற்று கைக்கோளின் குழைஞ்சான் பரளவிய விடங்னொன இடத்துவளி மாராயன் விளக்கு ஏற்றினான் என்று குறிப்பிடுகிறது.[26] வாழவந்தம்மன் கோவிலில் உள்ள தனிக்கல்லில் மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சிக்காலத்தில் வெண்பு நாட்டு செங்க்காட்டிருக்கை இடத்துவளி உள்ள கோவிலில் விளக்கு எரிப்பதற்காக நிலக்கொடை அளித்ததை இக்கல்வெட்டு கூறுகிறது.[27] கி.பி. 1279ம் ஆண்டு எம்மண்டலல் கொண்டருளிய குலசேகரனின் 11வது ஆட்சியாண்டில் புகலோகண்டநேரி அருகில் நீர் பாயும் நிலங்களை பிள்ளையார் கோவிலுக்கு நிலத்தானம் கொடுத்த செய்தியை அறிய முடிகிறது.[28]

கோவிலுக்கு நிலதானம் வழங்குபவர்கள் பெருமளவில் நிலத்தினை கொடுக்காமல் “காராண்மை” என்னும் நிலத்தில் பயிரிடும் உரிமையினை மட்டும் வழங்கியுள்ளனர். மேலும் அந்நிலத்தில் விளையும் விளைச்சலில் ஓர் குறிப்பிட்ட அளவினை தானம் செய்துள்ளனர். சான்றாக அருப்புக்கோட்டை சிவன் கோவிலில் உள்ள கல்வெட்டுகளில் கோவில் நந்தவனத்திற்காக கி.பி. 13ம் நூற்றாண்டு முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சிக்காலத்தில் மடபதி ஆலம்பாக்கமுடையான் பெருமான் உதயனான சதாசிவ தேவனுக்கு காராண்மையாக நிலம் வழங்கப்பட்ட செய்தியை குறல்மணிஸ்வரர் கோவில் அர்த்த மண்டபத் தென்சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது.[29] அந்த நிலத்திற்கு எல்லைகளும் குறிக்கப்பட்டுள்ளன. கோவிலுக்கு அளிக்கும் பொழுது பயிரின் தன்மையும், அதில் வீணான பயிரினை கருதியும் மீதமிருக்கின்ற பயிரை வைத்து கனக்கீடு செய்யப்படுகிறது என்பதை அறிய முடிகிறது.

இங்குக் காணப்படும் அனைத்துக் கல்வெட்டுகளும் கி.பி.13ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகவே விளங்குகிறது. இந்நூற்றாண்டில் இப்பகுதியில் வாழ்ந்தவர்கள் அதிகளவில் நிலதானங்களை வழங்கக் கூடிய அளவிற்கு செழிப்புடன் வாழ்ந்துள்ளனர் என்பதனை இங்குள்ள கல்வெட்டுகளின் வாயிலாக அறிய முடிகிறது.

## முடிவுரை

கி.பி. 13ம் நூற்றாண்டில் ‘செங்காட்டிருக்கை’ மற்றும் ‘இடத்துவளி’ என்னும் தற்போதைய அருப்புக்கோட்டையானது உள்ளூர் வணிகர்கள் மட்டுமல்லாது வெளிநாட்டு வணிகர்களும் தங்கும் ஓர்பாதுகாப்பான பகுதியாக அமைந்துள்ளது. இப்பகுதி மக்கள் வணிகத்தில் மேலோங்கியிருந்தனர் என்பதற்குச் சான்றாக **விக்கிரமபாண்டியன் பெருந்தெரு சந்தையும்-வளைஞ்சியர் வணிகக் குழுவும்** செயல்பட்டிருந்தது நம் வரலாற்று ஆய்வுக்கு துணைபுரிகின்றது. இங்குள்ள வணிகர்கள் சிவன் கோவிலுக்கு பெரும்பாலும் நிலம் மற்றும் சிலை எனப் பலவாறாக நன்கொடை செய்துள்ளனர். மேலும் இங்கே வணிகம் மட்டுமல்லாது விவசாயமும் மேற்கொண்டுள்ளனர். விவசாயத்தின் மூலமாக பெற்ற விளைச்சலில் ஒரு பகுதியினை சிவன் கோவிலுக்கு தானம் வழங்கியுள்ளனர். இவ்வாறு விவசாயம் மற்றும் வணிகம் என இப்பகுதி மக்கள் பொருளாதாரத்தில் செழித்து விளங்கியுள்ளனர்.

## அடிக்குறிப்புகள்

1. ARE.No. 402/1914, 403/1914, 406/1914, 408/1914, 405/1917, 407/1914, 409/1914, 410/1914, 412/1914, 411/1914.
2. விருதுநகர் மாவட்ட கல்வெட்டுகள் தொகுதி-1, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2008, தொடர் எண்: 139/2005, 1362/005, 129/2005, 128/2005.
3. ARE.No 402/1914.
4. ARE.No 406/1914.
5. அங்கிடிசாமி. அ, விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை அருள்மிகு சொக்கநாதசுவாமி திருக்கோயில் தலவரலாறு, அருப்புக்கோட்டை, 2012, ப.10.
6. இராசேந்திரன் பொ, சாந்தலிங்கம் சொ, வரலாற்று நோக்கில் விருதுநகர் மாவட்டம், பாண்டியநாட்டு வரலாற்று ஆய்வு மையம், மதுரை, 2014, ப.31.
7. விருதுநகர் மாவட்ட கல்வெட்டுகள், தொடர் எண்-128/205.
8. விருதுநகர் மாவட்ட கல்வெட்டுகள், தொடர் எண்-129/2005.
9. ARE.No. 408/1914.
10. ARE.No. 400/1914.
11. ARE.No. 406/1914, 407/1914, 408/1914, 405/1914.
12. விருதுநகர் மாவட்ட கல்வெட்டுகள், தொடர் எண்-136/2005.
13. பேட்டி, சாந்தலிங்கம். சொ, 23.03.2022.
14. விருதுநகர் மாவட்ட கல்வெட்டுகள் தொகுதி-1, தொடர் எண்- 132/2005, ப.11.
15. ARE.No. 406/1914.
16. விருதுநகர் மாவட்ட கல்வெட்டுகள் தொகுதி-1, தொடர் எண்- 135/2005, ப.14.
17. ARE.No. 402/1914
18. இராசேந்திரன் பொ, சாந்தலிங்கம் சொ, அருப்புக்கோட்டை மீனாட்சி சொக்கநாதர் கோயில் கல்வெட்டுகள், தமிழக தொல்லியல் துறை, தஞ்சாவூர். ஆவணம் 13, 2002, ப.44.

19. ARE.No.410/1914
20. ARE.No. 409/1914.
21. விருதுநகர் மாவட்ட கல்வெட்டுகள் தொகுதி-1, தொடர் எண்- 127/2005, ப.4.
22. ARE.No.409/1914
23. விருதுநகர் மாவட்ட கல்வெட்டுகள் தொகுதி-1, தொடர் எண்- 127/2005, ப.4.ARE.No. 413/1914
24. ARE.No.408/1914
25. ARE.No. 411/1914
26. ARE.No. 402/1914
27. விருதுநகர் மாவட்ட கல்வெட்டுகள் தொகுதி-1, தொடர் எண்- 139/2005, ப.18.
28. விருதுநகர் மாவட்ட கல்வெட்டுகள் தொகுதி-1, தொடர் எண்- 128/2005, ப.6.
29. ARE.No.405/1914


*****



©2023 by KRISHMA PUBLICATION